பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். சிலவற்றிலே தாமதமாக வேலைகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அதிலே தனிக் கவனம் செலுத்துவதற்கான அறிவுரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கலாம்.

பி.எச்.ஈ.எல். தொழிற்சாலைக்கு உப பாகங்கள் செய்து தர சிறு தொழிற்கூடங்கள்.

48—(*வினா எண் 13564) திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதியில், துவாகுடி ஊராட்சி (பேரூராட்சி), கூத்தப்பார் பேரூராட்சி, திருவெறும்பூர் பேரு ராட்சி, கூண்டூர் ஊராட்சிப் பகுதிகளில் பி.எச்.ஈ.எல். தொழிற் சாலைக்கு உப பாகங்கள் செய்துதர எத்தனை சிறுதொழிற் கூடங்கள் உள்ளன?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

(இ) இந்தத் தொழிற்கூடங்களில் நிரந்தரத் தொழிலாளர்கள் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 135 இடங்கள்.

(ஆ) தனிப்பட்ட தொழில் முனைவோரின் பராமரிப்பில் இவை இயங்கி வருகின்றன. இத்தொழிலிலிருந்து அரசாங்கத் திற்கு எந்தவிதமான வருமானமும் இல்லை.

(இ) மொத்தம் அங்கே பணியாற்றக்கூடியவர்கள் தோராய மாக 2,505 பேர்கள்.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பாய்லர் தொழிற்சாலைப் பகுதியில் 135 தனியார் சிறு தொழிற் கூடங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது. 135 தொழிற்சாலைகளும் பெல் தொழிற்கூடத்தை நம்பி இருக் கின்றன. இந்தத் தொழிற்கூடங்கள் தமிழ்நாடு அரசின்

வங்கிகள் மூலமாகவும் தமிழ்நாடு அரசினுடைய தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகவும் நிதி ஆதாரங்கள் பெற்று உருவாக்கப்பட்ட தொழிற்கூடங்களாகும். இந்தத் தொழிற் கூடங்களுக்கான வேலையை பெல் நிறுவனம்தான் தரவேண்டும் அதை நம்பித்தான், இந்தத் தொழிலை அவர்கள் ஆரம்பித் தார்கள். இப்போது, பெல்லிலிருந்து உபகரணங்கள் செய்யக் கூடிய, அதாவது ஓர்டர்களை அதிகமாகத் தருவதில்லை என்ற குறைபாட்டை அந்தப் பகுதியிலுள்ள சிறு தொழில் நிறுவனத்தினர் கூறுகிறார்கள். இது ஏன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறபோது, அந்த நிறுவனத்திலே உள்ள ஒருசில பேர்கள் அவர்கள் வேண்டியவர்களுக்கு ஓர்டரைக் கொடுப்பதும், எந்தெந்தக் கம்பெனி நிறுவனத்தார் அவர்களுக்கு அதிக ஆதரவு தருகிறார்களோ, அவர்களுக்கு மட்டும், அதிக வேலையைத் தருவதும், மற்றவர்களுக்கு கொடுக்கவில்லை என்றும் சொல்லு கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த 135 தொழிற்கூடங்களுக்கு வேலைகள் கிடைக்காமல் இருக்கின்ற குறையை நீக்குகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்திற்கு அரசு மூலமாக அறிவுரை வழங்குவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெல் நிறுவனத்தை நாம் கேட்டுக் கொள்ளலாம். ஆனால் அந்த நிறுவனம் இப்படித்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு நிச்சயமாக நமக்கு எந்த உரிமையும் இல்லை. அந்த நிறுவனத்தை நடத்தக் கூடிய வர்கள் தங்களுக்கு எது லாபகரமாக இருக்கிறதோ, தங்களுக்குக் குறைந்த விலையிலே யார் செய்து கொடுப்பார்களோ, அவர் களிடத்திலே அணுகிச் செய்வதுதான் முறையாக இருக்க முடியும். நம்முடைய அரசாங்கத்தில் இருக்கிற நிறுவனங்கள் கூட எங்கே குறைந்த விலையிலே செய்து கொடுக்கிறார்களோ, அவர்களை அணுகித்தான் வேலைகளைச் செய்வதற்கான முயற்சியை எடுக் கிறார்கள். எனவே அவர்கள் செய்வது தவறு என்று நாம் சொல்லிவிட முடியாது. ஒருவேளை அவர்கள் தவறாக அதிக விலைக்குச் செய்து கொடுப்பவர்களுக்கு கொடுத்து, எங்காவது பாரபட்சமாக செய்து கொண்டிருந்தால், அந்த நிர்வாகம்தான்

அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் கூட, அரசு மூலமாக கடனைப் பெற்று தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும் என்பதற்காக, அந்த பெல் நிறுவனத்தை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இந்தத் தொழிற்கூடங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தால் மிகவும் கஷ்டமான நிலையிலே அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு, தொழிலாளர் நலச் சட்டத்திற்கு பல திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கருதி சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு உரிமையும், பாதுகாப்பும் வேண்டும் என்று கேட்டால், எங்களுக்கு தொழிலே கிட்டவில்லை என்ற நிலையிருக்கும்போது, நாங்கள் எப்படித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்ற பதிலை அங்கே இருக்கின்ற அந்த 135 தொழிற் கூடங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கூறுகிறார்கள். ஆக இதை மனதில் கொண்டு அந்த தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையும், பாதுகாப்பும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலைப் பற்றி தொழிற்துறை பார்க்க வேண்டும். தொழிலாளர்களைப் பற்றி தொழிலாளர் நலத் துறை பார்க்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட தொழிலாளர் நலத் துறையிடம் அந்தக் கருத்தைச் சொல்லி அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கேட்பது பொருத்தமாக இருக்கும்.

பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகு போக்குவரத்து ஏற்படுத்துதல்.

49—(*வினா எண் 13829) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பங்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகுப் போக்குவரத்து ஏற்படுத்த அரசு முன்வருமா?